# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2304 - 2022 ඔක්තෝබර් මස 28 වැනි සිකුරාදා - 2022.10.28**

*2304 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 322 |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்***. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, நவெம்பர் மாதம்18ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022 நவெம்பர் மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

***கங்கானி லியனகே,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

321 - B 082395 - 353 (2022/10)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

**பகிரங்க ஏல விற்பனை**
**கொழும்பு வணிக உயர் நீதிமன்றம்**

Sri Lanka Ports Authority.
19, Church Street, Colombo-02.

*Plaintiff*

வழக்கிலக்கம்:
CHC 09/2006/REM
பிஸ்கல் நிறைவேற்று இல.:
13/2022

*Against*

1. "The Formentera, Now lying at the Port of Galle under arrest in action in REM No. 7 of 2005"

*Defendant*

மேலே குறிப்பிட்ட வழக்கின்படி என் மேல் சாட்டப்பட்டுள்ள விற்பனை அதிகாரப்பத்திரத்தின்படி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கொழும்பு வணிக உயர் நீதிமன்றத்தின் 2022.03.30 ஆந் திகதியிடப்பட்ட கட்டளைப்படி கீழ்க் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தினை பகிரங்க ஏலத்தில் விற்று பெறப்படும் பணத்தினை இவ்வழக்கின் வரவுக்கணக்கில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆகையால் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனத்தை கௌரவ நீதி மன்றத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கிணங்க 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு கொழும்பு புதுக்கடையில் அமைந்துள்ள வணிக உயர் நீதிமன்ற மண்டப இலக்கம்04 இல் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்பதை இதன்படி அறிவிக்கப்படுகின்றது.

**மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை**

தற்சமயம் காலி துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ள Formentera எனப் பெயரிடப்பட்டுள்ள கப்பல் ( Official Registration ), இல. 17431 - 87C இனம் Gas Barge GRT/ NRT-3. 514/ 1, 303

இவ் ஏல விற்பனையில் கலந்து கொள்வதற்காக அனைத்து முனைவுக்காரர்களும் மேலதிக விபரங்களை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் அமைந்துள்ள மார்ஷல் அவர்களின் அலுவலகத்தில் அல்லது இணையத்தில் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் கப்பலை பார்வையிடுவதற்கான அனுமதியை மார்ஷல் அவர்களிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

பதிவாளர்.

முகவரி: உயர்நீதி மன்றம், வணிக கப்பல் செயலகம்,
முதலாம் மாடி,
43-89, யோர்க் வீதி, கொழும்பு 1, இலங்கை.

இணையம்: www.dgshipping .gov.lk
தொலைபேசி இல.: + 9411243527

கொழும்பு வணிக உயர் நீதிமன்றம்,
2022, ஒற்றோபர் 17.

10- 363

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.